

# மின்மினி



டிசம்பர் 2018 மின்னல் 02, கதிர் 01

## சங்கமம் தமிழ்ப்பள்ளி

"முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு" ... குறள்: 786

### நிகழ்வுகள்

**செப்டம்பர் 15th 2018**
பெற்றோர் நோக்குநிலை
10.30 AM – 12.30 PM (Mercer Middle School, Virginia)

**அக்டோபர் 07th 2018**
சிற்றுலா / பெற்றோர் அறிமுகம்
11 AM – 5 PM (Algonkian Park, Sterling, Virginia)

### பள்ளி நிர்வாகக் குழு

திரு. சாந்தகுமார் 

திரு. மனோஜ் 

திருமதி. இந்திரா 

திருமதி. மஞ்சு 

திரு. சரவணபவன் 

### பள்ளி நிதிக் குழு

திருமதி சங்கீதா 

திரு சாய் 






























**தமிழ்** மொழியை அயல்சூழலில் வாழும் தமிழ்க் குழந்தைகள் கற்றுணர்ந்து, தம் அடையாளத்தை பெருமையோடு கொண்டாடி வளரவேண்டும் என்ற நோக்கத்துடன் 2014 ஆண்டு நமது **சங்கமம் தமிழ்ப்பள்ளி** தொடங்கப்பட்டது. **2014 லில்** சுமார் **35 மாணவர்கள்** சேர்க்கையிலிருந்து இன்று **160 க்கும்** மேலாக வளர்ந்து வெற்றிகரமாகச் செயல்படுகிறது. தரமான பாடத்திட்டம் மற்றும் ஆசிரியர் கலந்தாய்வுக்கூட்டம் மூலமாக மிகச்சிறப்பாக செயல்பட்டுவருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

நமது பண்டைத் தமிழ் கலாச்சாரமான **இயல், இசை, நாடகம், நடனம்** என பிள்ளைகள் தம் பன்முகத் திறனை மேடையேற்ற உதவுகிறோம். **தமிழார்வமுடைய யாவரும் எம்முடன் இணைந்து உதவலாம்.**

**தமிழாசிரியர் பயிற்சி** (Harvard Tamil Chair’s Teacher Training Workshop)

தங்கள் சொந்த வேலைகளை விட்டுவிட்டு நம் குழந்தைகளுக்கு எளிமையான முறையில் பாடம் கற்பிக்கவேண்டும் என்ற நோக்குடன் இரண்டு நாட்கள் தொடர்ந்து நடைபெற்ற தமிழாசிரியர் பயிற்சியில் பங்குபெற்ற ஆசிரியர்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள்.

**பள்ளிகளின் சங்கமம்**

தமிழ்ச்சங்கம் நடத்தும் பள்ளிகளின் சங்கமம் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு நம் பள்ளிக்கு தொடர்ந்து ஆதரவு தரும் அனைவருக்கும் நன்றி.

**பள்ளிச்சுற்றுலா 2018**

நம் சங்கமம் தமிழ்ப்பள்ளி குடும்பங்களின் இன்பச்சுற்றுலா இந்த வருடம் அக்டோபர் ஏழாம் தேதி காலை 11 மணி முதல் மாலை 5 மணி வரை Algonkian Regional பார்க்கில் மிக நன்றாக கொண்டாடப்பட்டது. சிறியவர், பெரியவர், தமிழ் பள்ளி குடும்பங்களின் உறவினர் என சுமார் 175 கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பெரும் ஆர்வத்தோடு பங்கேற்று அந்த நாளை குதூகலமாக கொண்டாடி மகிழ்ந்தனர்.

வழக்கம் போல் இந்த ஆண்டும் எலுமிச்சை - தேக்கரண்டி பந்தயம், கயிறு இழுக்கும் போட்டி, குழந்தைகளின் அலங்கரிக்கப்பட்ட மிதிவண்டி ஊர்வலம், கைப்பந்தாட்டம் போன்ற பலவித கேளிக்கை விளையாட்டுகள் நடைபெற்றன. இவ்வித போட்டிகள் அனைவரின் வயதையும் கவலைகளையும் மறக்க செய்து உடலிற்கும் மனதிற்கும் புத்தணர்வையே அளிக்கின்றன.

பலவீட்டு சாப்பாட்டிற்கு எப்பொழுதும் ருசி அதிகம் இல்லைங்கலா? அதுவும் எல்லாரோடும் சேர்ந்து உண்ணும் போது அதன் சுவை ஆலாத்தியே. பலரும் கொண்டு வந்திருந்த சத்தான உணவு வகைகள், தமிழ் பாரம்பரியம் மிக்க கம்பங்கூழ், கேப்பங்கூழ், சிற்றுண்டிகள்  மற்றும் பழங்களும் ஓடி ஆடி விளையாடி கலைத்தவர்க்கு தெம்பளிக்கும் விதமாகவே அமைத்திருந்தது.

**ஓவியப் போட்டி**

இந்த ஆண்டு நவம்பர் 3ம்  தேதி அன்று நமது சங்கமம் தமிழ்ப்பள்ளியின் ஓவியப்போட்டி  மிகச்சிறப்பாக நடைபெற்றது. நம் செல்ல சிறார்களின் வர்ணம் தீட்டும் திறமையையும், குழந்தைகளின் கற்பனை வளம் மிகுந்த எழில்மிகு  ஓவிய ஆற்றலையும் வெளிக்கொணரும் சரியான தளமாகவே அமைந்திருந்தது. போட்டியை பள்ளியின் கேபிடேரியாவில் நடத்தியதில் ஒருங்கிணைப்பாளர்களின் யோசனை பாராட்டுக்குரியதே!


குழந்தைகளின் வயதிற்கு ஏற்ப ஓவிய தலைப்புகள் முன்னதாகவே வழங்கப்பட்டதால் பெற்றோர்களும் மாணவர்களும் அதனை சரியாக பயன்படுத்தி கொண்டனர். ஓவிய போட்டியை நல்ல முறையில் நடத்த உதவிய ஒருங்கிணைப்பாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் தன்னார்வலர்கள் அனைவருக்கும் பள்ளியின் பாராட்டுக்கள்.

**ஹாலோவீன் கொண்டாட்டம்**

இந்த ஆண்டு மிக எளிமையான முறையில் நமது பள்ளியினுள்ளே ஹாலோவீன் கொண்டாடப்பட்டது. குழந்தைகள் அனைவரும் அவரவரின் விருப்பமான கதாபாத்திரங்களின் மாதிரிகளாக தோற்றமளித்து மகிழ்ந்தனர். தன்னார்வம்மிகுந்த சில பெரியோர்களும் வேடம் பூண்டு எல்லோரையும் வியக்கவைத்து குழந்தைகளை ஊக்குவித்து மகிழ்வித்தனர்.

- கௌதம புத்தர் என்று போற்றப்படும் சித்தார்த்தர், ஒரு இந்திய மதகுரு ஆவார்
- புத்த மதத்தைத் தோற்றுவித்தவர்
- ஆசைகளுக் காரணம் துன்பம் என்று போதித்தவர்

## கௌதம புத்தர் (Nithila Neethidevan)



- புத்தர் தனது போதனைகளை போதிக்க உலகம் முழுவதும் பயணம் மேற்கொண்டார்

- ராஜ பரம்பரையில் பிறந்த அவர சிறுவயதில் செல்வ செழிப்பான ஆடம்பர வாழ்க்கைக் வாழ்ந்தார
- ஆடம்பர வாழ்வு பிடிக்காமல் அரண்மனையை விட்டு வெளியேறினார்
- வழியில் அவர், ஒரு முடமான முதியவர. ஒரு நோயற்ற மனிதன், ஒரு பிணம் மற்றும் இறுதியில் ஒரு அமைதியான துறவியைப் பார்த்தார்
- ஆனால், அவர் இறுதியில் கண்ட துறவியின் முகத்தில் அமைதி தெரிந்தது
- துறவற வாழ்க்கை மேற்கொள்ள முடிவெடுத்து, துறவறம் தேட சென்றார்
- உண்மையைக் கண்டறிய ஒரே வழி - தியானம் என்று உணர்ந்து போதி மரத்தின் கீழ் 49 நாட்கள் தியானம இருந்தார, ஞானம் பெற்றார்.



# ஆதி ஷங்கரர்

நிவேதா மோகன்

- ஸ்ரீ ஆதி ஷங்கரர் ஒரு ஏழை பிராமண குடும்பத்தில் பிறந்தார்.
- அவருடைய பெற்றோர்: ஆர்யாம்பா, ஷிவகுரு.
- அவர் சிவபெருமானின் அவதாரமாக வந்தார்.
- பிறசமயங்களின் தாக்கத்தில் இருநது இந்து சமயத்தை மீள் கட்ட மைப்பது அவர் குறிக்கோள்
- அவர் தாயார் அவர் துறவி ஆவதை முதலில் அனுமதிக்கவில்லை. ஒரு முதலையிடம் இறக்க போகும் சமயத்தில் அவர் தாயார் ஷங்கரர் துறவியாக அனுமதி கொடுத்தார்
- முறையான கல்வி பயின்ற பிறகு 8 வயதில் அவருடைய குரு ஸ்ரீ கோவிந்தபாதா அவர்களிடம் பிரம்ம வித்யா பயின்றார்
- இந்தியாவின் பல இடங்களுக்கு நடந்து பயணம் செய்தார
- அத்வைத வேதாந்த கொள்கைகளை நிறுவி அதன் ஆசிரியராக இருந்தார்.


# எனக்கு முன்னால் வரும் எழுத்துக்களை கண்டுபிடிங்க பாப்போம்

## இரண்டாம் நிலை இளம் மொட்டுக்கள் - ஆதவ், ஹாசினி, தர்ஷினி










பின்வரும் எழுத்துக்களுக்கு முன்னால் வரும் எழுத்துக்களை எழுதுக.

| | |
|---|---|
| | ஆ |
| | ஔ |
| | ஏ |
| | ஈ |
| | ஐ |
| | ஓ |
| | உ |
| | ஃ |










கொடியின் நடுவில் கோல்களைக் கொண்ட சக்கர வடிவ சின்னம் உள்ளது. எத்தனை கோல்கள் உள்ளன கண்டு பிடிங்க பாப்போம்!!!

இரண்டாம் நிலை குட்டிஸ் - ஸ்ருத்திகா, முகில், வீரா

ஆசிரியர் - அனிதா செந்தில்குமார், ஐஸ்வர்யா ஸ்ரீனிவாசன்

மொழி என்பது கலாச்சாரத்தின் ஒரு வெளிப்பாடு. இந்த கலாச்சாரத்தின் வெளிப்பாட்டை நமது தமிழினம் அயலகச் சூழலில் ஒன்று சேர்ந்து நமது தமிழ் மொழியை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லும் ஒரு மகத்தான நோக்கத்தில் சங்கமம் தமிழ்ப் பள்ளி என்ற பெயரில் 2013ல் ஆரம்பித்து இன்று சுமார் 160 மாணவர்களுடன் திறம்பட செயல்படுத்தி, வெற்றிகரமாக ஒவ்வொரு ஆண்டும் பொங்கல் விழா மற்றும் தமிழ்ப் பள்ளியின் ஆண்டு விழா நடத்தும் நிர்வாகக் குழு உறுப்பினர்களுக்கும் ஆசிரியர்கள் மற்றும் தன்னார்வலர்கள் அனைவருக்கும் எங்கள் வாழ்த்துக்கள்.

சமீபத்தில் நடந்த இசை நிகழ்ச்சி மிகவும் சிறப்பாக இருந்தது. பல குழந்தைகள் தமிழ்ப் பாடல்களை மிகவும் திறமையாகப் பாடினார்கள். ஒவ்வொரு வருடமும் இதைப்போல நடத்தி பல குழந்தைகளின் திறமைகளை மற்றும் பள்ளியின் புகழை வெளிக்கொணர வேண்டும்.மேலும், இந்த தருணத்தில் எங்களது பேர குழந்தைகள் நிவேதா மோகன், அருண் மோகன் இவர்களை பற்றி கட்டாயம் குறிப்பிட்டே ஆக வேண்டும். நிவேதா சரளமாக எங்களுடன் தமிழ் பேசுகிறார். நாங்கள் பேசும் தமிழை அருண் புரிந்து கொள்கிறான். அதற்குரிய பதிலை தெரிந்த வரை தமிழில் கூறுகிறார். ஆதலால் நாங்கள் ஆங்கிலத்தில் உரையாடுவதில்லை. இதுவே எங்களுக்கு மிக்க மகிழ்ச்சி.

வாழ்த்துக்களுடன்

சுவாமிநாதன் முத்துப்பழனி
ராஜசேகரி சுவாமிநாதன்

திருச்சி



| Student Name | Place | Age Category |
|---|---|---|
| Dharshini Arun | First | 4-5 |
| Anusree Jeyaguru | Second | 4-5 |
| Rishi Gomathinayagam | First | 6- 7 |
| Samyuktha | Second | 6- 7 |
| Nila Prem | First | 8-9 |
| Kanmani Jayprakash | Second | 8-9 |
| Dhanya Babu | First | 10-11 |
| Sampriti Muthuswamy | Second | 10-11 |
| Aakrithi Karthik | First | 12-13 |
| Sakthi Senthil Nath | First | 12-13 |
| Siddharth Senthilkumaran | Second | 12-13 |
| Kayal Sadasivam | First | 14 & Above |

## ஓவியப்போட்டி முடிவுகள்

அழகா வரைந்து நம் கண்களுக்கு விருந்தளித்த குழந்தைச்செல்வங்கள் அனைவருக்கும் சங்கமம் தமிழ்ப்பள்ளியின் வாழ்த்துக்கள்.

ஓவியப்போட்டியை சிறப்பாக நடத்த உதவிய **தீபா செந்தில்நாத்** மற்றும் **கார்த்திக் பத்மநாபன்** குழுவினருக்கு நன்றிகள் பல.

## தீம் பாடல்

சங்கமம் தமிழ்ப்பள்ளி தமிழார்வலர்களின் புதிய முயற்சியில் உருவானது தான் சங்கமம் தமிழ்ப்பள்ளியின் தீம் பாடல்.

எழுதியவர்: **<u>லோகநாதன்</u>**

பாடியவர்கள்: **<u>ஷீபா பிரேம், காவ்யா சுந்தரம், பீட்டர் ராஜ் அமல்ராஜ், சதீஷ்</u>**
இசை கோர்ப்பு: **<u>ஷீபா பிரேம்</u>**

## பேச்சுத்தமிழ் வகுப்பு

புது முயற்சியாக இவ்வருடம் பேச்சுத்தமிழ் வகுப்பு தொடங்கப்பட்டு மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. பேச்சுத்தமிழ் வகுப்பு மாணவர்களின் பேச்சுத்திறமையை காண ஆவலா?

Pease visit the link below and watch the videos titled:

**1) Speech Class – Dec 2018 (Video1)**
**2) Speech Class – Dec 2018 (Video2)**

http://sangamamtamilschool.org/செய்திமடல்-newsletter/







